The Times of India

Dated: 07.07.2024

# Vikravandi: AIADMK-BJP clash could tip scales in DMK's favour

## EPS Remarks Seen As Sign For Cadres Not To Back PMK

**Data from recent Lok Sabha polls show that Vikravandi assembly segment has been in favour of DMK whose functionaries point out that the party got more votes than AIADMK and NDA candidates in Vikravandi assembly segment**

**Bosco Dominique & V Mayilvaganan** | TNN

The verbal duel between AIADMK general secretary Edappadi K Palaniswami and BJP state president K Annamalai may well benefit the ruling DMK in the Vikravandi byelection.

After AIADMK decided to boycott the bypoll, the decision was expected to give an edge to PMK, contesting on the BJP front. The logic was that AIADMK voters would not want their arch-rival DMK to win the election. In fact, speculation was rife that AIADMK stayed away from the election to make way for PMK, hoping that the vanniyar party would break away from BJP alliance and return to AIADMK ahead of 2026 assembly election.

But Annamalai's continued diatribe against EPS appears to have ended the possibilities of AIADMK votes going to BJP front. Though EPS has chosen not to criticise PMK, his hard-hitting comments aimed at Annamalai and BJP are seen by AIADMK cadre as a signal not to back PMK candidate C Anbumani.

That leaves AIADMK voters with three choices, to vote for DMK, to vote for NTK or abstain from voting. DMK men feel that in all three cases they are bound to gain because their key rival in the election PMK would not get the AIADMK votes, which might tilt the outcome.

Political observers point out that a clash between EPS and Annamalai does not automatically guarantee a diversion of AIADMK votes to DMK. Nevertheless, the polarisation of AIADMK votes in favour of PMK-BJP front would be largely curtailed, they say. This in turn was enough to ensure that DMK retains its edge in the bypoll.

Data from recent Lok Sabha polls too show that Vikravandi assembly segment has been in favour of DMK. DMK functionaries point out that their party got more votes than AIADMK and NDA candidates in Vikravandi assembly segment, which falls in Kallakurichi parliamentary constituency. "So, if votes of AIADMK and NDA do not combine, then it's a cakewalk for us," say DMK functionaries.

NTK chief coordinator Seeman, who has not allied with any party in the past, extended open support to AIADMK's anti-hooch protest in Chennai. This was seen as a bid to woo AIADMK voters in Vikravandi. Thanks to the effort, some AIADMK votes might go to Naam Tamilar Katchi. Neither does it mean there would be en masse transfer of AIADMK votes to NTK so as to ensure its victory.

The Hindu (Tamil)


Dated: 07.07.2024

### விக்கிரவாண்டியில் தேர்தல் பிரச்சாரத்தின்போது

# திமுக - நாம் தமிழர் கட்சியினர் மோதல்

● விழுப்புரம்

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பிரச்சாரத்தின்போது திமுக, நாம் தமிழர் கட்சியினரிடையே மோதல் ஏற்பட்டு, போலீஸார் முன்னிலையிலேயே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



↑ விக்கிரவாண்டி அருகேயுள்ள தொரவி கிராமத்தில் மோதலில் ஈடுபட்ட திமுக மற்றும் நாம் தமிழர் கட்சியினர்.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் 10-ம் தேதி நடைபெற உள்ளது. மொத்தம் 29 வேட்பாளர்கள் களத்தில் இருந்தாலும், திமுக, பாமக, நாம் தமிழர் கட்சியினர் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட தொரவி, பனையபுரம், அசோகபுரி உள்ளிட்ட இடங்களில் திறந்தவெளி வாகனத்தில் வாக்குச் சேகரித்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா, எதிர் திசையில் ஏராளமான பெண்களுடன் வாக்குச் சேகரித்தபடி வந்த திமுகவினரையும், அவர்களுடன் சென்ற பெண்களையும் பார்த்து சரமாரியாக கேள்விகளை எழுப்பினார்.

"ஒரு நாள் அவர்கள் கொடுக்கும் 500, 1,000 பணத்துக்காக ஏன் இப்படி வந்து தெருவில் நிற்கிறீர்கள்? உங்களை எல்லாம் பார்த்தால், அறியாமையில் நின்று கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. கள்ளச் சாராய மரணங்களுக்கு என்ன பதில் வைத்திருக்கிறீர்கள்? பணத்தை வாங்கிக் கொண்டு திமுகவினருடன் சென்றால், அந்த பாவம் உங்கள் பிள்ளைகளுக்கு வந்து சேரும்" என்று நாதக வேட்பாளர் அபிநயா பேசினார். இதனால் அவர் மீது திமுகவினர் கடும் கோபத்தில் இருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை தொரவி கிராமத்தில் உள்ள திரௌபதி அம்மன் கோயில் அருகே வாக்கு சேகரிப்பில் ஈடுபடுவதற்காக, 100-க்கும் மேற்பட்ட திமுகவினர் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது அந்தவழியாக பிரச்சாரம் செய்தபடி வந்த நாம் தமிழர் கட்சியினர், வழக்கம்போல திமுகவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியபடி, திமுகவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று பிரச்சாரம் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த திமுகவினர், நாம் தமிழர் கட்சியினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றி, மோதலாக மாறியது. இரு தரப்பினரும் போலீஸார் முன்னிலையில் ஒருவரையொருவர் சரமாரியாக தாக்கிக் கொண்டனர். தொடர்ந்து, மோதலில் ஈடுபட்ட திமுக, நாம் தமிழர் கட்சியினரை தடுத்து நிறுத்திய போலீஸார், இரு தரப்பினரையும் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

மோதல் தொடர்பாக திமுக, நாம் தமிழர் கட்சி தரப்பில் யாரும் புகார் அளிக்கவில்லை என்று போலீஸார் தெரிவித்தனர்.

Clash between DMK & N.T.K parties during the election campaign in Vikravandi Assembly constituency

Daily Thanthi
Dated: 07.07.2024

விக்கிரவாண்டியில் பரபரப்பு

# தேர்தல் பிரசாரத்தில் தி.மு.க.-நாம் தமிழர் கட்சி மோதல்; கல்வீச்சு



விக்கிரவாண்டி அருகே மோதலில் ஈடுபட்ட தி.மு.க.-நாம் தமிழர் கட்சியினரை போலீசார் தடுத்து நிறுத்தியபோது எடுத்தபடம்.

விக்கிரவாண்டி, ஜூலை.7-

விக்கிரவாண்டி தேர்தல் பிரசாரத்தில் தி.மு.க.-நாம் தமிழர் கட்சியினர் மோதிக்கொண்டனர்.

## வாக்கு சேகரிப்பு

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை தொகுதிக்குட்பட்ட தொரவி, பனையபுரம், அசோகபுரி உள்ளிட்ட இடங்களில் திறந்தவெளி பிரசார வாகனத்தில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா வாக்கு சேகரித்து கொண்டிருந்தார்.

அப்போது எதிர்திசையில் ஏராளமான பெண்களுடன் தி.மு.க.வினர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபடி நடந்து சென்று கொண்டிருந்தனர்.

## சரமாரியாக கேள்வி

அந்த சமயத்தில் தி.மு.க.வினரை பார்த்து நாம் தமிழர் கட்சியினர் சரமாரியாக கேள்விகளை எழுப்பியதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக நாம் தமிழர் கட்சியினர் மீது தி.மு.க.வினர் கடும் கோபத்தில் இருந்து வந்தனர்.

இந்த சூழலில் தொரவி கிராமத்தில் உள்ள திரவுபதியம்மன் கோவில் பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபடுவதற்காக 200-க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் நின்றுகொண்டிருந்தனர்.

## கடும் மோதல்

அப்போது அவ்வழியாக பிரசாரம் செய்தபடி வந்த நாம் தமிழர் கட்சியினர், தி.மு.க.வினரை பார்த்ததும் தி.மு.க.விற்கு எதிராக கோஷங்களை எழுப்பியபடி அவர்களுக்கு வாக்களிக்கவேண்டாம் என பிரசாரம் செய்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த தி.மு.க.வினர், பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நாம் தமிழர் கட்சியினரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஒருகட்டத்தில் வாக்குவாதம் முற்றி மோதலாக மாறியது. அப்போது தி.மு.க.வினரும், நாம் தமிழர் கட்சியினரும் ஒருவரையொருவர் சரமாரியாக திட்டி கையால் தாக்கிக்கொண்டனர்.

## கல்வீச்சு

மேலும் தி.மு.க.வினர், கீழே கிடந்த கற்களை எடுத்து நாம் தமிழர் கட்சியினர் மீது வீசினர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவானது.

இதை அறிந்த போலீசார் அங்கு விரைந்து வந்து, மோதலில் ஈடுபட்ட தி.மு.க., நாம் தமிழர் கட்சியினரை தடுத்து நிறுத்தி சமாதானப்படுத்தி இரு தரப்பினரையும் அப்புறப்படுத்தினர்.

தேர்தல் பிரசாரத்தின் போது தி.மு.க., நாம் தமிழர் கட்சியினர் மோதிக்கொண்டது விக்கிரவாண்டி தொகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Clash between DMK & N.T.K party during the election campaign in Vikravandi assembly constituency.

Daily Thanthi

Dated: 07-07-2024

நாடாளுமன்ற தேர்தலில் வேட்புமனு நிராகரிப்பு:

# டெபாசிட் தொகையை திருப்பிக்கொடுக்க ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜூலை.7-

வக்கீல் பிரகாசம் என்பவர் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்
தலில் மதுரை தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட வேட்
புமனு தாக்கல் செய்தார். ஆனால், சாதிச்சான்றிதழ் தாக்கல்
செய்யவில்லை என்று கூறி அவரது வேட்புமனு நிராகரிக்கப்பட்
டது. ஆனால், அவர் டெபாசிட் செய்த 12 ஆயிரத்து 500 ரூபாயை
திருப்பித்தரவில்லை. இதையடுத்து அவர் சென்னை ஐகோர்ட்
டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு பொறுப்பு தலைமை
நீதிபதி ஆர்.மகாதேவன், நீதிபதி முகமது சபீக் ஆகியோர் முன்பு
விசாரணைக்கு வந்தது. அப்போது, வேட்புமனுவுடன் செலுத்திய
டெபாசிட் தொகையை திரும்பத்தரக்கோரி உரிய படிவத்தில்
விண்ணப்பித்தால், அந்த விண்ணப்பத்தை பரிசீலித்து பணத்தை
திரும்ப கொடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தரப்பில்
விளக்கம் அளிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்ட
நீதிபதிகள், "மனுதாரர் ஒரு வாரத்துக்குள் டெபாசிட் தொகையை
திரும்பக்கேட்டு விண்ணப்பம் கொடுக்கவேண்டும். அந்த விண்
ணப்பத்தை சட்டப்படி பரிசீலித்து 2 வாரத்துக்குள் பணத்தை
திரும்ப கொடுக்க வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

Court orders to refund of deposit Rejection of nomination in parliamentary elections

Daily Thanthi

Dated: 07·07·2024

இடைத்தேர்தல் நடைபெறும் 10-ந்தேதி அன்று

# சென்னையில் பணியாற்றும் விக்கிரவாண்டியை சேர்ந்தவர்களுக்கு விடுமுறை

## தனியார் நிறுவனங்களுக்கு, தொழிலாளர் நலத்துறை உத்தரவு

சென்னை, ஜூலை.7-

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 10-ந்தேதி (புதன்கிழமை) நடைபெறுகிறது. இதையொட்டி சென்னையில் பணியாற்றும் விக்கிரவாண்டி தொகுதியை சேர்ந்தவர்கள் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக அன்றைய தினம் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்றும், தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சென்னை மண்டல தொழிலாளர் நலத்துறை இணை கமிஷனர் அறிவித்து உள்ளார்.

விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் மீது பணியாளர்கள் புகார் அளிக்க வசதியாக சென்னை மாவட்டத்தில் தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் விஜயலட்சுமி (98408 29835), ஏகாம்பரம் (9790930846), வேதநாயகி (9884264814) ஆகியோர் அடங்கிய கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

Labor welfare department orders Holiday on 10th for vikravandi employees working in chennai for By election